ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2472/21 - 2026 ජනවාරි මස 21 වැනි බදාදා - 2026.01.21
*2472/21 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**
**8(9) ஆம் உப பிரிவின் கீழான அறிவித்தல்**

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(9) ஆம் உப பிரிவிற்கமைய சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதை செயல்வலுப்படுத்துவதற்கும் வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதற்கும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் பணிப்புகள், பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறாகுமென்பதை இத்தால் அறிவிக்கின்றோம்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம்.ஏ.பீ.சி.பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ.சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2026, சனவரி மாதம் 13 ஆம் திகதி.

1A - PG 7485 — 48 (2026/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4) ஆம் உப பிரிவின் கீழ் அரசியற் கட்சியொன்றாக கணிக்கப்படுதல் தொடர்பாக சொல்லப்பட்ட சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக அச்சட்டத்தின் 8(9) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்படும் பணிப்புகள்

| சட்ட ஏற்பாடுகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | | அளவுகோல்கள் |
|---|---|---|
| 1. கட்சி யாப்பு | 1.1 | இந்த வர்த்தமானியின் இணைப்பு 01 இல் அரசியற் கட்சியொன்றின் யாப்பைத் தயாரித்தல் தொடர்பான அளவுகோல்களை முன்வைப்பதற்கான வழிகாட்டிநெறி தரப்பட்டுள்ளது. அதன்படி, அங்கீகாரத்திற்காக விண்ணப்பிக்கும் அரசியற் கட்சியொன்றின் யாப்பு, ஏற்புடைய விடயங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| 2. உத்தியோகத்தர் சபை | 2.1 | விண்ணப்பிக்கும் திகதியில் கட்சி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பதவிகளுக்கும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| | 2.2 | அரசியற் கட்சி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய பதவிகளில் குறைந்தபட்சம் ஒன்றிற்கு பெண் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்படுதல் வேண்டும். |
| | 2.3 | அரசியற் கட்சிகளைப் பதிவுசெய்வதற்கு விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு முந்திய நான்கு ஆண்டு காலத்துள், உத்தியோகத்தர் சபையில் பெண் பிரதிநிதித்துவம் சம்பந்தப்பட்ட நான்கு ஆண்டுகளிலும் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| | 2.4 | கூட்டணியாக இணையாமல் கட்சி உத்தியோகத்தர் சபையில் வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள்/ அங்கத்தவர்கள் இருப்பின், அவர்கள் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| 3. கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகள் | 3.1 | கட்சிகளைப் பதிவுசெய்வதற்கு விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு முந்திய நான்கு ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக்கூற்றுக்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக்கூற்றுக்கள் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஓராண்டு காலத்துக்கு அல்லது மாச்சு மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஓராண்டு காலத்துக்கு உரியதாக இருத்தல் வேண்டும். |
| | 3.2 | அரசியற் கட்சியின் வருமானங்களையும் செலவினங்களையும் சொத்துக களையும் பொறுப்புக்களையும் பரீட்சித்து அவை சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்று பதிவு செய்யப்பட்ட கணக்காய்வாளரொருவர் உறுதிப்படுத்துவதே கணக்காய்வு அபிப்பிராயம் என்று கருதப்படுகிறது. இக் கணக்காய்வு அறிக்கைகள் கட்சியின் பொருளாளர்/ செயலாளர்/ தவிசாளர் ஆகிய பதவிகளில் குறைந்தபட்சம் இரண்டு பேரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். கணக்காய்வு நியமத்திற்கு அமைய கணக்குகள் பராமரிக்கப்பட்டுள்ளது என்பதை கணக்காய்வாளர் தனது கணக்காய்வு அபிப்பிராயம், தனது கையொப்பம், பதவி இலச்சினை என்பவற்றை இட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| | 3.3 | இறுதி ஆண்டுக்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்று முடிக்கப்பட்டிருக்கவில்லை எனில், அது பற்றி அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது முடிக்கப்பட்டவுடன் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், விண்ணப்பிக்கும் கட்சி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பமளவில், மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குக் கூற்றை கட்டாயமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

4. கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம்

4.1 அரசியல் கட்சி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைவதற்காக தயாரிக்கப்பட்ட ஒரு கொள்கைப் பிரகடனம் இருப்பது அத்தியாவசியமாகும். அத்தகைய கொள்கைப் பிரகடனம், விண்ணப்பத்துடன் தனி ஆவணமொன்றாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

4.2 கொள்கைப் பிரகடனத்தை கட்சியின் மத்திய செயற்குழு/ உத்தியோகத்தர் சபை எளிய பெரும்பான்மையினால் அங்கீகரித்திருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட கொள்கைப் பிரகடனம் அங்கீகரிக்கப்பட்ட கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளும் கையொப்ப ஆவணங்களும் அக்கொள்கைப் பிரகடனத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5. அரசியல் கட்சியின் பெயர்

5.1 அரசியல் கட்சியொன்றாக அங்கீகாரம் பெற விண்ணப்பிக்கும் கட்சியின் பெயர், ஏற்கனவே அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட கட்சியொன்றின் பெயரை ஒத்திருக்கக்கூடாது அல்லது தப்பாக வழிநடத்தும் குழப்பநிலை அல்லது செயல்முனைப்புக்கு காரணமாக அமையுமளவுக்கு குறித்த அரசியல் கட்சியின் பெயர் அவ்வாறு உரிமை பெற்றுள்ள கட்சியின் பெயரை ஒத்திருக்கக்கூடாது. பெயரின் ஒற்றுமை குறித்து தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்யும்.

6. அரசியல் செயற்பாடுகள்

6.1 முக்கியமாக நாட்டின் சனநாயகம், வாக்குரிமை, சட்டவாட்சி என்பவற்றைப் பாதுகாப்பதற்கும் பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அக் கட்சி செயலூக்கமுள்ள விதத்தில் அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 அரசியல் கட்சியொன்றாக அங்கீகாரம் பெறுவதற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு முந்திய 4 ஆண்டு காலத்துள் குறித்த கட்சி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். குறித்த 4 ஆண்டுகளில் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் 5 அரசியல் செயற்பாடுகள் வீதமேனும் மேற்கொண்டிருத்தல் வேண்டும். மேலும் 5 அரசியல் செயற்பாடுகளில் குறைந்தபட்சம் இரண்டு, முதன்மை அரசியல் செயற்பாடுகளாக இருத்தல் வேண்டும்.

6.2.1 **முதன்மை அரசியல் செயற்பாடுகள்**

6.2.1.1 அரசியற் கட்சிகளை அங்கீகரிப்பதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அரசியற் கட்சிகள், நான்கு ஆண்டு காலத்துள் தமது வேட்பாளர்களை சுயாதீனமாகவோ அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றுடன் கூட்டணியாக இணைந்து போட்டியிடச்செய்தோ தேர்தலொன்றில் சுயாதீனமாக போட்டியிட்டிருத்தல் வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்கு -

- சம்பந்தப்பட்ட கட்சிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் (MoU),
- தேர்தல் ஆணைக்குழுவுக்கு இந்த முறையில் போட்டியிடுவதாக கூட்டிணைந்த கட்சியின் செயலாளர் அனுப்பிவைத்த கடிதத்தின் பிரதியொன்றையும் பெற்றுக் கொண்ட தேர்தல் முடிவுகள் பற்றிய விபரத்தையும்,
- போட்டியிட்ட மாவட்டத்தின் உள்ளூர் அதிகார சபை, போட்டியிட்ட வேட்பாளரின் அடையாள அட்டை இலக்கம், பெயர், தொலைபேசி இலக்கம், முகவரி ஆகிய விபரங்களையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல் காலம் அடுத்தமைந்த இரண்டு ஆண்டுகளில் வரும் போது அத்தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கம், இரண்டு ஆண்டுகளுக்கும் கவனத்திலெடுக்கப்படும். இருப்பினும், போட்டி தனியாகவோ அல்லது கூட்டணியாகவோ நடத்தப்பட்டதாக திட்டவட்டமாக உறுதிசெய்யப்பட்டால் மட்டுமே இரண்டு ஆண்டுகளைப் பரிசீலிக்க முடியும்.

6.2.1.2 அரசியற் கட்சியொன்று குறித்த ஓர் ஆண்டில் அதன் வருடாந்த மாநாடுகளையும் மாவட்ட மாநாடுகளையும் நடத்தி கிளைச் சங்கங்களை நிறுவியிருக்கும் பட்சத்தில், அத்துடன் அது உறுதிசெய்யப்படும் பட்சத்தில், அது குறித்த ஆண்டின் ஒரு முக்கிய அரசியல் செயற்பாடாகக் கருதப்படும். இவற்றை உறுதிசெய்ய சம்பந்தப்பட்ட கூட்டங்கள், கிளை சங்கங்களை நிறுவியமைக்கான பின்வரும் தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும்:-

- புகைப்படங்கள், வீடியோ கிளிப்புகள்.
- அழைப்பு விடுக்கப்பட்ட ஆவணங்கள்.
- கூட்ட நிகழ்ச்சிக்குறிப்பு.
- பங்கேற்றவர்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்.
- கூட்டம் நடைபெற்ற இடம், திகதி மற்றும் நேரம்.

6.2.1.3 அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒரு கட்சி, தமது கட்சியின் கொள்கைகளையும் அரசியல் செயற்பாடுகளையும் பிரசாரம் செய்வதற்காக கடந்த 04 ஆண்டுகளாக தொடர்ந்து, செய்தித்தாள்களை அல்லது சஞ்சிகைகளை அச்சிட்டு வெளியிட்டிருப்பது முதன்மை அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படும். இதனை உறுதிசெய்ய அத்தகைய செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

- சம்பந்தப்பட்ட சஞ்சிகைகளும் செய்தித்தாள்களும் கட்சி அங்கீகாரத்திற்காக விண்ணப்பித்த இறுதி ஆண்டுக்கு மட்டும் உரிய வெளியீடுகளாக இருக்கக் கூடாது.
- சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கட்சி அங்கத்தவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின், அத்தகவல் வழங்கப்படுதல் வேண்டும். அவர்களின் கட்சியால் மேற்கொள்ளப்பட்ட கட்சிச் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் உட்சேர்க்கப்பட்டிருப்பின், அது சம்பந்தமாக தெரிவிக்கப்படுதல் வேண்டும்.
- ஆவணங்கள், கட்சிக் கொள்கைகளின்படி சமர்ப்பிக்கப் பட்டுள்ளனவா என்பது குறித்த தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

6.2.1.4 விண்ணப்ப காலத்துக்கு மேலதிகமாக, நாட்டில் எழுந்துள்ள ஓர் அரசியற் கருத்தியல் அல்லது ஒரு தேசிய அல்லது சமூகப் பிரச்சினை சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தேசிய ரீதியில் அதற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ வேட்பாளர் தொடர்புடைய ஆண்டில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கலாம். இதற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் அந்நடவடிக்கைகள் பற்றியும் தெளிவான சான்றுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.2.1.5 தேசிய ரீதியாக நாடுமுழுவதும் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் கொள்கைப் பிரகடனங்கள், மூலக்கோட்பாடுகள் மற்றும் கருத்துக்களை மக்கள்மயப்படுத்துவதற்கான ஒரு தொடர் வேலைத்திட்டம் குறித்த ஆண்டு முழுவதும் அமுல்படுத்தப்பட்டிருப்பது ஒரு முதன்மை அரசியல் செயற்பாடாகக் கருதப்படும். கிளைச் சங்க நிறுவனங்கள் மற்றும் பல்வேறு இனக் குழுக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல். இளைஞர், மகளிர் மற்றும் முதியோர் சங்கங்களை நிறுவுதல். கட்சியைச் சார்ந்த அத்தகைய சங்கங்களின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.2.2 **பிற அரசியல் செயற்பாடுகள்**

6.2.2.1 அரச கொள்கைகள் சார்ந்த கட்சி அல்லது எதிர்க்கட்சி செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டமை.

6.2.2.2 பொதுமக்களின் உரிமைகள் சார்பாக தோன்றும் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டமை.

6.2.2.3 நாட்டில் சனநாயகம், வாக்குரிமை மற்றும் சட்டவாட்சியைப் பாதுகாப்பதற்கு அல்லது முன்னெடுக்கப்படும் பல்வேறு கல்வி நிகழ்ச்சிகளை நடாத்துதல் அல்லது அது தொடர்பான பிற செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளமை.

6.2.2.4 நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவது குறித்து கட்சித் தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து அமுல்படுத்துதல்.

6.2.2.5 தேர்தலொன்றில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அக்கட்சிக் கொள்கைகளை அமுலுக்கிடுதல் தொடர்பில் பொது முக வராண்மையினுள் செயற்படுவதும் அந்தந்த ஆண்டுக்குரிய செயற் பாடுகளாகக் கருதப்படும்.

6.2.2.6 ஓர் அமைப்பு அதனோடு இணைக்கப்பட்ட தொழில்சார், இளைஞர், மகளிர் முதலான அமைப்புகளைத் தொடர்ந்து நடத்தி வந்து, அத்தகைய அமைப்புகள் தொடர்புடைய அரசியற் கட்சியால் நடத்தப்படுகின்றன என்பது உறுதிசெய்யப்படுமாயின், அத்தகைய கருமங்கள்.

6.2.2.7 தேசிய அல்லது சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு எழுத்திலான விளக்கமளிப்பது மட்டும் கட்சி அரசியல் செயற்பாடாக கருதப்படாது. இருப்பினும், இவ்வாறான பல்வேறு விடயங்கள் குறித்து அத்தகைய கடிதங்களைத் தொடர்ந்து சமர்ப்பிப்பது குறித்த ஆண்டில் ஊடக அறிவித்தல்களை வெளியிடுவதாகக் கருதி செயலாற்றப்படும்.

6.2.2.8 ஓர் அமைப்பு, பல சுற்றாடல் அல்லது சமூக நலன்புரி அல்லது சமூக சேவை அல்லது தொழில்சார் செயற்பாடுகளையும் பிற அரசியல் செயற்பாடுகளையும் ஒராண்டில் மேற்கொண்டிருப்பின், அத்தகைய சுற்றாடல் செயற்பாடுகள் அல்லது நலன்புரி செயற்பாடுகள் அல்லது சமூக சேவை செயற்பாடுகள் அல்லது தொழில்சார் செயற்பாடுகள், அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொழில்முறை நடவடிக்கைகள் அந்த ஆண்டுக்குரிய ஓர் அரசியல் செயற்பாடாகக் கருதப்படலாம். மேலும், இதுபோன்ற பல துறைகளில் செயற்பாடுகள் பிற அரசியல் செயற்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டிருப்பின், ஒவ்வொரு துறையுடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஒன்றிணைப்பதன் மூலம் ஒவ்வொரு துறைக்கும் உரிய தனித்தனி செயற்பாடுகளாகக் கருதப்படும்.

6.2.3 பின்வருவன, அரசியல் செயற்பாடுகளாகக் கருதப்படாது.

6.2.3.1 பிற அரசியற் கட்சிகளின் ஆண்டு நிறைவு விழாக்களுக்கும் வருடாந்த மாநாடுகளுக்கும் உரிய அழைப்பிதழ்களைப் பெறுவது அல்லது அவற்றில் பங்கேற்பது, அரசாங்க விழாக்கள் அல்லது அரசாங்கக் கூட்டங்களில் பங்கேற்பது ஆகியவை கட்சியின் அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படாது.

6.2.3.2 கட்சியின் பெயரில் உள்ள சமூக வலைத்தள தனிப்பட்ட கணக்குகள் அல்லது வரையறுத்த குழுமங்கள் மூலம் கட்சியின் கருத்தியல்களை பிரசாரம் செய்வது அந்த ஆண்டுக்குரிய அரசியல் நடவடிக்கையாக இருந்த போதும், அது ஒரு முதன்மை அரசியல் நடவடிக்கையாகக் கருதப்படாது. கட்சி ஆர்வலர்களின் தனிப்பட்ட பெயர்களில் பராமரிக்கப்படும் சமூக ஊடக கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கட்சியின் செயற்பாடுகளுக்கான சான்றாகப் பெற முடியும் என்ற போதும், அத்தகைய தனிப்பட்ட பெயர்களில் கணக்குகளைப் பராமரிப்பதை கட்சியின் அரசியல் செயற்பாடொன்றாக கருத முடியாது.

6.2.3.3 கட்சியின் குறிப்பிட்ட தலைவரொருவர் அல்லது உத்தியோகத்தர் ஒருவர், கட்சியின் பெயரில் பல்வேறு விடயங்கள் குறித்து தொடர்ந்து அச்சு/ இலத்திரனியல் ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள் மூலம் அறிவிப்புகளை வெளியிடுவது அல்லது தொடர்ந்து ஊடக கலந்துரையாடல்களை நடத்துவது அந்த ஆண்டிற்கான கட்சியின் ஒரு செயற்பாடாகக் கருதப்படலாம் என்ற போதும், பொதுமக்கள் பங்கேற்பு இல்லாமல் அல்லது களத்தில் எந்த செயற்பாடும் இல்லாமல் ஊடக அறிவித்தல்களை வெளியிடுவது அல்லது ஊடக கலந்துரையாடல்களை நடத்துவது மட்டும் தொடர்ச்சியான அரசியல் செயற்பாடாகக் கருதப்படாது.

6.2.3.4 சுற்றாடல், மதம், நலன்புரி, சமூக சேவைகள், தொழிற்சங்கங்கள் போன்ற ஒரு துறைக்கு மட்டுமே ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகள், அந்த விடயத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை மட்டும் மேற்கொள்வது தொடர்ச்சியான அரசியல் செயற்பாடுகளாகக் கருதப்படாது.

6.2.3.5 ஓர் அமைப்பு, அதன் அரசியல் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக சமூக சேவை செயற்பாடுகள் அல்லது சமூக நல செயற்பாடுகள் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் காட்டினால், அத்தகைய செயற்பாடுகள் நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையெனில், குறைந்தபட்சம் ஒரு முழு தேர்தல் மாவட்டம் அல்லது நிர்வாக மாவட்டத்தை உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்பட்டிருப்பின் மட்டுமே அத்தகைய செயற்பாடுகள் அரசியல் செயற்பாடுகளாகக் கருதப்படும் சாத்தியமுண்டு. உதாரணமாக:- ஒரு தேர்தல் மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் மட்டும் சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுவது அரசியல் செயற்பாடொன்றாகக் கருதப்படாது.

6.3 ஒவ்வோர் ஆண்டு தொடர்பிலும் இத்தகைய அரசியல் செயற்பாடுகளை வெவ்வேறாக தயாரித்து சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

6.4 ஒவ்வோர் அரசியல் செயற்பாட்டுக்கும் தொடர்புடைய செயற்பாடு, அச்செயற்பாட்டை மேற்கொண்ட திகதி, இடம் ஆகிய விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

6.5 சமூக வலைத்தளங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய தகவல்களை அடையாளம் காணக்கூடிய விதத்தில் சம்பந்தப்பட்ட தொடர்புகளின் தகவல்கள், நேரம் மற்றும் திகதி வழங்கப்படுதல் வேண்டும்.

7. சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

7.1 இந்த வர்த்தமானியின் இணைப்பு-02 இல் காட்டப்பட்டுள்ள உரிய விண்ணப்பப்படிவத்தை அதனோடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் ஆவணங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு, கட்சியின் செயலாளரால் கையொப்பமிடப்பட்டு, விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டு, தனித்தனியாக, தேர்தல் ஆணைக்குழு அறிவிக்கும் இறுதித் திகதிக்கு முன்னர், ஆணைக்குழுவுக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது கட்சியின் செயலாளர் நேரில் வந்து ஒப்படைப்பதன் மூலமோ அனுப்பிவைத்து அதனை சமர்ப்பித்தமைக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

முழுமையாக நிரப்பிய விண்ணப்பப்படிவத்தில் கட்சியின் செயலாளர் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். மேலும் பின்வரும் ஆவணங்கள் இரண்டு(02) பிரதிகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

7.1.1 கட்சியின் யாப்பு.

7.1.2 கட்சியின் உத்தியோகத்தர் சபையின் பட்டியல்.

7.1.3 கட்சியின் பெண் உத்தியோகத்தர்களின் பெயர்கள் (கடந்த 04 ஆண்டுகளுக்குரிய)

7.1.4 கட்சியின் கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குக் கூற்றுகள் (விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டுக்கு முந்திய 04 ஆண்டுகளுக்குரிய)

7.1.5 கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம்.

7.1.6 அரசியற் கட்சியொன்றாக குறைந்தபட்சம் கடந்த 04 ஆண்டுகளாக தொடர்ந்து செயற்பட்டு வருவதை எண்பிப்பதற்கு சமர்ப்பிக்கப்படக்கூடிய அனைத்து ஆவணங்களும் ஆண்டு வாரியாக 4 தனித்தனி கோப்புகளாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

7.2 அரசியற் கட்சிகளின் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிப்பதாயின், தேர்தல் ஆணைக்குழு கோரும் சந்தர்ப்பத்தில் மேற்குறித்த அனைத்து செயற்பாடுகளையும் உறுதிப்படுத்துவதற்கான முறையான ஆவணங்களை/ அறிக்கைகளை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8. முழுமையற்ற விண்ணப்பப்படிவங்களும் ஆணைக்குழு திருப்தியடையாத விதத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களும் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்படாமல் நிராகரிக்கப்படும்.

இணைப்பு - 01

## அரசியற் கட்சி யாப்புகளைத் தயாரிப்பதற்கு அளவுகோல்களை முன்வைப்பதற்கான வழிகாட்டி

தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒருங்கிணைந்த சட்டகமொன்றை அறிமுகப்படுத்தும் நோக்குடன் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கும் பின்வரும் வழிகாட்டல்களை வழங்குகின்றது. இதன்மூலம் அரசியல் கட்சிகளின் உள்ளக நிருவாகத்தை முறையாக பேணுவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ஒத்த சந்தர்ப்பமளித்து சனநாயக மூலக்கோட்பாடுகளுடன் ஒத்திசைவடைவதற்கான ஒருங்கிணைந்த ஒரு வழிகாட்டல் வழங்கப்படுகின்றது. இத்தகைய வழிகாட்டல்களை அனுசரிப்பதன் ஊடாக அரசியற் கட்சிகளுக்கு குறித்த கட்சிகளின் உள்ளக நிருவாகத்தைப் பலப்படுத்துவதற்கும், அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிப்பதற்கும் சனநாயக செயன்முறைகள் மீதான மக்களின் நம்பகத்தன்மை அதிகரிப்பதற்கும் வாய்ப்பு உருவாகும்.

### 1. கட்சி யாப்பு
### நிலையான ஏற்பாடுகள்

#### 1.1 கட்சியின் கொள்கைப் பிரகடனம்

கட்சி ஒவ்வொன்றும், அக்கட்சி ஏற்றங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4)(இ) உப பிரிவிற்கமைய கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனத்தின் பிரதியொன்றை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. எனினும், அநேகமான கட்சி யாப்புகளில் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் வெவ்வேறாக காணக்கூடியதாக இருக்கின்ற போதும், பொதுவான கட்சிக் கொள்கையைக் காண முடியவில்லை. அக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொண்டர்களுக்கு புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் தெளிவாக தமது கட்சியின் கொள்கை அக்கட்சி யாப்பில் உட்சேர்க்கப்படுதல் வேண்டும். அதேபோல், அக்கட்சிக் கொள்கை இன, சாதி, மத, வர்க்க பேதங்கள் இன்றியதாக இருத்தல் வேண்டும்.

#### 1.2 நோக்கங்கள்

கட்சியின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகளை தெளிவாகக் குறிப்பிடுதல். கட்சிக் கொள்கைக்கு ஏற்புடையவாறு கட்சியின் நோக்கங்களும் குறிக்கோள்களும் அதில் தெளிவாக உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

#### 1.3 கட்சியின் பெயர்

கட்சியின் பெயரும் குறும்பெயரும் மும்மொழிகளிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

#### 1.4 அங்கத்துவ ஒழுங்குவிதிகள்

அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதற்கான தகைமைகளும் அங்கத்துவத்தை வறிதாக்கும் செயன்முறைகளும் பற்றிய விபரங்கள் உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

#### 1.5 முக்கிய உள்ளீடுகள்

சனநாயகம், சட்டவாட்சி, மனித உரிமைகள், சமூக நீதி என்பவற்றுக்கான அர்ப்பணிப்பு பாதுகாக்கப்படுகின்றவாறு அமைந்திருத்தல் வேண்டும்.

#### 1.6 உள்ளக சனநாயகம்

பெரும்பான்மையின் விருப்பத்தின் அடிப்படையில் கட்சித் தலைவர்களையும் கட்சி அமைப்பாக்கத்தில் தீர்மானமெடுக்கும் அலகையும் (நிறைவேற்றுச் சபை, அரசியல் பீடம், உயர் பீடம்) தெரிவுசெய்வதற்கான நடபடிமுறைகளை மேற்கொள்ளல்.

#### 1.7 பாலின சமத்துவம்

தலைமைத்துவத்திற்கும் பெயர்குறித்த நியமனங்களின் பிரதிநிதித்துவத்திற்கும் ஒத்த சந்தர்ப்பங்களுக்கான தடைகளை ஏற்படுத்தாதிருத்தலும், பேதமின்றி சந்தர்ப்பங்களை ஊக்குவித்தலும்.

### 1.8 ஒழுக்காற்றுச் செயன்முறைகள்

மனக்குறைகள், பிணக்குகள், ஒழுக்காற்று விடயங்கள் என்பன முறையாக இடம்பெறுகின்றவாறு தெளிவான சட்டகமொன்றை அறிமுகப்படுத்துதல்.

### 1.9 ஒழுக்கநெறிக் கோவை

அங்கத்தவர்களுக்கும் தலைவர்களுக்கும் ஒழுக்கம்சார் வழிகாட்டல் கோவையொன்றை தயாரித்தல்.

### 1.10 யாப்புத் திருத்த நடபடிமுறை

யாப்புத் திருத்த படிமுறைகளைத் தெளிவுபடுத்துதல், கட்சி யாப்பை சொந்த நோக்கங்களின் பேரில் திருத்தும் போக்குகள் தவிர்க்கப்படுதல் வேண்டும். அதற்காக கட்சி யாப்பில் திருத்தங்களை மேற்கொள்ளக்கூடிய விடயங்களையும் திருத்தங்களை மேற்கொள்ள முடியாத விடயங்களையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். திருத்திய பின்பு தேர்தல் ஆணைக்குழுவை அறிவுறுத்த வேண்டும் என்பதுடன், யாப்பைத் திருத்துவதற்கு அதிகாரமுள்ள கட்சியின் நிறுவனக் கட்டமைப்பு அல்லது உத்தியோகத்தர் யார் என்பதைக் குறிப்பிடுதல்.

## 2. கட்சிக் கட்டமைப்பும் அங்கத்துவமும்

### 2.1 கட்சியின் நிறுவனக் கட்டமைப்பு

அரசியல் கட்சிகளின் நிறுவனக் கட்டமைப்பு தெளிவாக இருத்தல் வேண்டும். நிறுவனக் கட்டமைப்பின் படிநிலைகள் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக (கட்சிக்கு தனிச்சிறப்பான வேறு வழிமுறைகள் இருப்பின், அதன்படி) வகைப்படுத்தி அவற்றின் வகிபாகம், தீர்மானமெடுக்கும் அலகுகள் மற்றும் ஒவ்வொரு படிநிலையிலும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக முன்வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### 2.2 கட்சி அங்கத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு அங்கத்தவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடபடிமுறைகள், தகைமைகள், அங்கத்தவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அங்கத்தவரொருவரின் கட்சி அங்கத்துவம் வறிதாகின்ற விதம் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கட்சி அங்கத்தவர் தானாகவே கேட்டுவிலகல் தவிர அங்கத்துவக் கட்டணம் செலுத்தப்படாமை அல்லது கட்சி நடவடிக்கைகளுக்காக முனைப்புடன் செயற்படாமை அல்லது பிறழ் நடத்தைகள் என்ற நிலைமைகளின் கீழ் கட்சி அங்கத்துவம் வறிதாக்கப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய நடபடிமுறையும் உரிய தீர்மானமெடுக்கும் அலகு உள்ளிட்ட கட்சியின் நிறுவனக் கட்டமைப்பு தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அதேபோல், ஒரு கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் ஆளொருவருக்கு மற்றுமொரு கட்சியில் அங்கத்துவம் பெற முடியுமா என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கான நிபந்தனைகள் இருப்பின், அவற்றையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

### 2.3 அனைவருக்கும் சந்தர்ப்பமளித்தல்

பாலின சமத்துவம், இளைஞர் பங்கேற்பு, மட்டுப்படுத்திய வாய்ப்புகள் உள்ள சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நியாயமான பிரதிநிதித்துவமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

## 3. நிருவாகமும் முடிவெடுத்தலும்

அரசியல் கட்சியின் முடிவுகளை எடுக்கும் போது இந்த நிருவாகப் பதவிவரிசையில் சிக்கல்கள் (கட்சி ஒழுங்கமைப்பு அலகுகளிடையே) அல்லது அதிகாரங்கள் தொழிற்படும் விதம் சம்பந்தமாக முன்பின் முரண்பாடுகள் எழாதிருத்தல் வேண்டும். கட்சி யாப்பில் கட்சி அங்கத்தவர்களைக் கொண்ட பிரதேச அலகுகள் (பிரதேச கிளைகள், தொகுதி அதிகார பீடங்கள், மாவட்ட அதிகார பீடங்கள், தேசிய அதிகார பீடம்) அடிப்படையிலும், கட்சியின் உள்ளக பதவிவரிசையில் முடிவெடுக்கும் நிறைவேற்று பீடம், அரசியல் பீடம், உயர் பீடம் என்ற அலகுகள் அதிகாரப் பதவிவரிசையில் நிலைகொண்டிருக்கும் விதம்,

அத்தகைய அலகுகளுக்கு அமுல்படுத்தக்கூடிய அதிகாரவெல்லை, அத்தகைய அதிகாரம் அமுல்படுத்தப்படும் விதம் என்பவற்றை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிடுதல் வேண்டும்.

நிருவாகக் கட்டமைப்புக்கு இந்த ஒவ்வொரு அலகிற்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், அங்கத்தவர்களின் எண்ணிக்கை, கூட்டங்களைக் கூட்டுவதற்கான அதிகாரம் என்பவற்றுடன் முடிவெடுக்கும் போது கூட்ட நடப்பெண்ணை திட்டவட்டமாக குறிப்பிடுதல் வேண்டும்.

சனநாயக கருத்துருக்களுக்கு முரணான விதத்தில் கட்சியின் தலைவருக்கு, கட்சியின் தவிசாளருக்கு அல்லது கட்சியின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்ட அங்கத்தவர்களை நீக்கும், இணைத்துக்கொள்ளும் அதிகாரங்களும், கட்சியின் பல்வேறு அலகுகளுக்கு தற்றுணிபு அதிகாரத்தைக்கொண்டு நியமித்தல் அல்லது நீக்குதல் ஆகாது என்பதுடன், அது குறித்து திருப்தியற்ற தரப்புகளுக்கு அதற்கு மேன்முறையீடு செய்யக்கூடிய முறையொன்று இருப்பதன் மூலம் கட்சி உள்ளக சனநாயகம் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

**3.1 கட்சிப் பொதுக் கூட்டங்களை நடத்துதல்**

ஆண்டுக்கொரு முறையேனும் பொதுச் சபைக் கூட்டம் நடத்தப்படுதல் வேண்டும். சிறப்பான காரணங்களின் பேரில் அவ்வாறு செய்ய முடியாத நிலை ஏற்படுமாயின், இரண்டு ஆண்டுகளுக்குள்ளேனும் உத்தியோகத்தர் சபையை (பதவிதாங்குநர் சபை) தெரிவுசெய்வதற்கு வெளிப்படையான தேர்தலொன்று நடைபெறுதல் வேண்டும்.

தேர்தல் நடைபெறுவது கட்சியின் ஒழுக்கநெறிக்கோவையுடன் இணங்க வேண்டுமென்பதுடன், அதற்குரிய தகைமைகளை/அளவுகோல்களை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். இயற்கை நீதி, நியாயம் என்பவற்றைப் பின்பற்றி இரகசியத்தன்மை, நியாயத்திற்காக பொருத்தமான வாக்கெடுப்பு முறையொன்றைக் கையாளுதல் அல்லது அங்கத்தவர்கள் நியாயமானதெனக் கருதுகின்ற வேறு எந்தவொரு செயன்முறையையும் பின்பற்றுதல்.

தேர்தல் நடைபெறும் செயன்முறையைக் கண்காணிப்பதற்கு குறித்த அரசியல் கட்சியினால் சுயாதீன குழுவொன்றை அல்லது சுயாதீன பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும்.

**3.2 கட்சி உத்தியோகத்தர் சபை**

கட்சி உத்தியோகத்தர் சபைக்குரிய பதவிகளும் அத்தகைய ஒவ்வொரு பதவிக்கும் நியமிக்கப்படும் விதமும் தொடர்பில் பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்:-

3.2.1. கட்சியின் பதவிகளையும் அத்தகைய பதவிகளுக்குரிய அதிகாரங்களையும் திட்டவட்டமாக குறிப்பிடுதல் வேண்டும்.

3.2.2. கட்சியின் பதவிகளுக்கு நியமிக்கப்படும் விதத்தையும் அத்தகைய பதவிகளுக்குரிய அதிகாரக் கட்டமைப்பையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

3.2.3. கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கப்படுவதையும் அவ்வாறு நீக்கப்படுவதற்கான முறையையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

3.2.4. நீக்கும் அதிகாரம், அத்தகைய அதிகாரத்துடன்கூடிய அதிகாரபீடத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

3.2.5. முக்கிய பதவிகளான தவிசாளர், செயலாளர், பொருளாளர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றுக்கேனும் மகளிர் பிரதிநிதித்துவமொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

3.2.6 கட்சி உத்தியோகத்தர் சபையில் பதவி வெற்றிடங்களை நிரப்பும் விதம் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

### 3.3 முடிவெடுக்கும் செயன்முறை

3.3.1 முடிவெடுப்பதற்கு வெளிப்படைத்தன்மையான பொறிமுறையொன்றைப் பின்பற்றுதல்.

3.3.2 கட்சியின் முக்கிய விடயங்கள் சம்பந்தமாக முடிவெடுக்கும் போது பரந்தளவில் அங்கத்தவர் பங்கேற்பை ஊக்குவித்தல்.

### 3.4 கூட்டங்கள் நடைபெறும் முறை

3.4.1 முறைசார் கூட்டங்கள்: தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களுக்கான கால இடைவெளிகளைக் குறிப்பிடுதல் (உதாரணமாக: காலாண்டு, இரண்டு மாத)

3.4.2 அவசர கூட்டங்கள்: அவசரமான விடயங்களுக்காக கூட்டங்கள் கூட்டப்படும் விதமும் அவற்றில் எடுக்கப்படும் முடிவுகளின் செயல்வலுப்பெறும் தன்மையும் பற்றி தெளிவுபடுத்துதல் வேண்டும்.

3.4.3 ஆண்டுப் பொதுக் கூட்டங்கள்: அரசியல் செயற்பாடுகளை மீளாய்வுசெய்தல், நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல், கட்சிக் கொள்கைகள் குறித்து கலந்துரையாடுதல்.

3.4.4 கட்சி உத்தியோகத்தர் சபையை தெரிவுசெய்வதற்கான கூட்டங்கள்: உத்தியோகத்தர் சபையைத் தெரிவுசெய்வதற்கான தெளிவான காலச்சட்டங்களையும் வழிகாட்டல்களையும் வழங்குதல் வேண்டும். இங்கு, கூட்டங்களுக்கு அழைப்புவிடுப்பதற்கு அதிகாரமுள்ள அலகை அல்லது பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

3.4.5 நிரந்தர பேராளர் கூட்டங்களும் கட்சி மாநாடுகளும்: இத்தகைய கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கும் அதிகாரம் யாதேனுமோர் உத்தியோகத்தருக்கா/ கட்சி அமைப்பு அலகிற்கா உள்ளது என்பது பற்றியும் அவ்வாறு அழைப்பு விடுக்கும் முறை பற்றியும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

3.4.6 இவ்வனைத்துக் கூட்டங்களின் விபரமான கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளையும் வரவு அறிக்கைகளையும் பராமரிப்பது கட்டாயமானது என்பதோடு, கட்சி மாநாட்டு அறிக்கையை ஒரு மாத காலத்தினுள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## 4. நிருவாக மற்றும் நிதி முகாமை

### 4.1 நிதிசார் பொறுப்புக்கூறல்

நிதியை முகாமைசெய்வதற்கும் ஆண்டுக்குரிய கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும் சட்டதிட்டங்களை ஏற்படுத்தல். நிதிக்குரிய பற்றுச்சீட்டுக்களை வழங்குதல், வங்கியில் நிதி வைப்பிலிடல் போன்ற பல்வேறு நிதி முறைகளும் அவற்றைச் செலவிடுவதாயின் அதற்கு கட்சியிலுள்ள நிருவாக முறை முதலான விடயங்கள் மீது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இவ்வனைத்துப் பணிகளிலும் கட்சியின் அனைவருக்கும் அறிந்துகொள்ளக்கூடிய, திட்டவட்டமாக குறிப்பிடப்பட்ட, வெளிப்படைத்தன்மையான, சரியான நிதி முகாமைத்துவமொன்று இருத்தல் வேண்டும்.

நிதிமூலங்கள் பற்றிய வெளிப்படைத்தன்மையுடன் தேவையான சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக வெளிப்படுத்துவதற்காக சரியான தகவல்களை பராமரித்து வருதல் வேண்டும்.

### 4.2 சட்டங்களுக்கு இசைந்தொழுகல்

2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(9) உப பிரிவிற்கு அமைய வெளியிடப்படும் பொதுவான மற்றும் விசேடமான ஏற்பாடுகளுக்கும் ஏற்புடைய ஏனைய சட்டதிட்டங்களுக்கும் அமைய செயலாற்றுதல் வேண்டும்.

**4.3 கட்சி ஒழுக்காற்றுகை சம்பந்தமான விடயங்கள்**

கட்சி ஒழுக்காற்றுகை அமுல்படுத்தப்படும் விதத்தை தெளிவாகவும் குழப்பம் இன்றியதாகவும் குறிப்பிடுதல் வேண்டும். எந்தவொரு நிலை ஒழுக்கமீறலொன்றாகக் கருதப்படும் என்பதையும் எந்த அதிகார பீடம் அதனைத் தீர்மானிக்கும் என்பதையும் ஒழுக்க மீறலொன்றுக்கு உரிய விசாரணைகள் எவை என்பதையும் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும். இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு அமைய அத்தகைய விசாரணைகள் அமுல்படுத்தப்படுவது முக்கியமானது. கட்சி ஒழுக்காற்று தொடர்பில் முடிவெடுக்கும் கட்சி ஒழுங்கமைப்பு அலகும் அதற்கான முறைமைகளும் இறுதி முடிவை வழங்குதலும் திட்டவட்டமான காலப்பகுதியொன்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**4.4 அறிக்கைகளைப் பேணுதல்**

இற்றைப்படுத்திய அங்கத்தவர் பட்டியல்களும் கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளும் நிதி அறிக்கைகளும் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

**5. அனைவருக்கும் சந்தர்ப்பமளித்தலும் பிரதிநிதித்துவமும்**

**5.1 பாலின சமத்துவத்தை உட்படுத்துதல்**

2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கு அமைவாக நியமிக்கப்படும் மகளிர் பிரதிநிதித்துவம் தவிர, தலைமைப் பதவிகளுக்கு மகளிரை நியமிப்பதற்கு குறைந்தபட்ச சதவீத கட்டளையொன்றை விதித்தல். (உதாரணமாக: தொடக்கத்தில் 25% முதல் 35% வரையும் அதனை இறுதியில் 35% முதல் 50% வரையும் அதிகரிக்கலாம்.)

வருடாந்த மீளாய்வுகளின் ஊடாக பாலின சமத்துவம் பற்றிய அளவுகோல்களுக்கு இணங்கியொழுவதைக் கண்காணித்தல்.

**5.2 இளைஞர், வலிமையிழந்தோர் மற்றும் விளிம்புநிலையினர் பிரதிநிதித்துவம்:**

இளைஞர்கள் (35 வயதுக்குக் குறைந்த), வலிமையிழந்தோர் மற்றும் விளிம்புநிலைக் குழுமங்களுக்கு தலைமைப் பதவிகளை ஒதுக்குதல் (உதாரணமாக: 10%)

**5.3 பிரதேச பிரதிநிதித்துவம்**

பிரதேச வாரியான பிரதிநிதித்துவங்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விகிதாசார பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்.

**6. தேர்தல் செயன்முறைகள்**

**6.1 வேட்பாளர்களைத் தெரிவுசெய்தல்**

வெளிப்படைத்தன்மையுடன்கூடிய, சனநாயக ரீதியான பெயர்குறித்த நியமன செயன்முறையொன்றை பேணுதல்.

**6.2 பிரசார சட்டங்கள்**

ஒழுக்க ரீதியான பிரசார நியமங்களை செயல்வலுவாக்கம் செய்தல். ஆணைக்குழுவின் பணிப்புகளுக்கும் வழிகாட்டிநெறிகளுக்கும் கட்டுப்பட்டு பிரசாரத்தை முன்னெடுத்தல் வேண்டும்.

## 7. அறிக்கையிடுதலும் கண்காணிப்பும்

### 7.1 வருடாந்த அறிக்கையிடல்

#### 7.1.1 கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக்கூற்றுக்களை உரிய திகதிக்கு வழங்குதல்

கணக்கு ஆண்டை யாப்பில் குறிப்பிடுதல், கட்சியின் வருமான செலவின செயன்முறையை தெளிவாகக் குறிப்பிடுதல், கணக்குக்கூற்றை கணக்காய்வுசெய்யும் கணக்காய்வாளரை ஆண்டு தொடக்கத்தில் அடையாளம் காணல், கணக்கீட்டுச் செயன்முறை பற்றிய பொறுப்பை கட்சி யாப்பினாலேயே பொருளாளரிடம் ஒப்படைத்தல், கணக்காய்வு நோக்கத்தில் சோதனையிடப்பட்ட ஆவணங்களை கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடுதல் ஆகியன அத்தியாவசிய விடயங்களாக கருதப்படும்.

#### 7.1.2 தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டிய அறிக்கைகள்

தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டிய அறிக்கைகள் தொடர்பாக கட்சிச் செயலாளர்கள் பொறுப்புக்கூறுதல் வேண்டும். ஒவ்வோர் ஆண்டு தொடக்கத்தில் கட்சியின் உத்தியோகத்தர் சபை, அவர்களின் தொலைபேசி இலக்கங்கள், முகவரிகள் முதலான தகவல்களை இற்றைப்படுத்தலும் அத்தகைய தகவல்களை ஆணைக்குழுவுக்கு வழங்குதலும் இணைப்பூட்டல் பிரச்சினைகள் குறைவதற்கு காரணமாக அமையும்.

#### 7.1.3 தேர்தலுக்குப் பிந்திய அறிக்கையிடல்

ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்பும் தமது கட்சியின் பிரதிநிதித்துவம், பாலின சமத்துவம், இளைஞர் பங்கேற்பு ஆகியன அடங்கிய தேர்தல் செயன்முறை தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குதல் வேண்டும்.

#### 7.1.4 உள்ளக கண்காணிப்பு

யாப்பு ரீதியான ஒத்திசைவை உறுதிப்படுத்துவதற்கும் கணக்காய்வை மேற்பார்வை செய்வதற்கும் மீளாய்வுக் குழுவொன்று நிறுவப்படுதல் வேண்டும்.

#### 7.1.5 கட்சித் தலைமையகம்

ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கும் தேர்தல் ஆணைக்குழுவுடன் தொடர்ச்சியாக தொடர்புகளைப் பேணக்கூடிய கட்சி அலுவலக முகவரியொன்றுடன் கூடிய அல்லது நிரந்தர முகவரியொன்றுடன் கூடிய ஒரு கட்சித் தலைமையகம் இருக்க வேண்டும் என்பதுடன், அந்த முகவரியில் மாற்றம் ஏற்படுமாயின், அது பற்றி தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

## 8. அரசியற் கட்சிகளுக்கான மாதிரி யாப்பு

**முகவுரை**

இந்த யாப்பின் மூலம் இலங்கைப் பிரசைகளுக்கு சேவையாற்றும் போது சனநாயக ரீதியான பெறுமானத்தைப் பாதுகாப்பதற்கும், அனைவருக்கும் சந்தர்ப்பமளிப்பதற்கும், பொறுப்புக்கூறல் மற்றும் சட்டவாட்சியைப் பாதுகாப்பதற்குமான (..................... கட்சியின் பெயர் ...................) அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்படுகிறது.

**கட்சி அறிமுகம்**

| | | |
|---|---|---|
| 1. கட்சியின் பெயர், கட்சியின் கொள்கை, நோக்கு மற்றும் குறிக்கோள்கள் | : | கட்சியின் அடையாளத்தையும் இலக்குகளையும் பொருள்கோடல் செய்தல். |
| 2. அங்கத்துவம் | : | தகைமைகள், உரிமைகள் மற்றும் ஒழுக்காற்று நடபடிமுறைகளை நிறுவுதல். |
| 3. நிறுவன அமைப்பு | : | தேசிய, பிராந்திய, பிரதேச படிநிலைகளைக் குறிப்பிடுதல். |
| 4. தலைமைத் தேர்தல்கள் | : | சனநாயக ரீதியான, அனைவருக்கும் சந்தர்ப்பமளிக்கும் செயன்முறைகளை உறுதிப்படுத்துதல். |
| 5. கூட்டங்கள் | : | முறைசார்ந்த தன்மையும் வெளிப்படைத்தன்மையும் |
| 6. நிதி முகாமை | : | பொறுப்புக்கூறலையும் வெளிப்படைத்தன்மையையும் பாதுகாத்தல். |
| 7. ஒழுக்கநெறிக் கோவை | : | பண்பாடான நடத்தையும் ஒழுக்கத்தை ஊக்கப்படுத்தலும். |
| 8. திருத்தங்கள் | : | யாப்பு ரீதியான மாற்றங்களுக்கான நடபடிமுறைகளை பொருள்கோடல் செய்தல். |
| 9. அறிக்கையிடல்/ஒத்திசைவு | : | வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலுக்கான அர்ப்பணிப்பும். |

**அமுலாக்கற் படிமுறைகள்:**

| | | |
|---|---|---|
| 1. வழிகாட்டல்களின் அபிவிருத்தி | : | அரசியல் கட்சிகள் தமது யாப்புகளை இந்த மூலக்கோட்பாடுகளுக்கு அமைய வரைந்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 2. இயல்திறன் விருத்தி | : | ஒத்திசைவு, அனைவருக்கும் வாய்ப்பளித்தல் மற்றும் நிருவாகம் பற்றிய செயலமர்வுகளை ஒழுங்குசெய்தல். |
| 3. இணக்கக் கணக்காய்வு | : | வழிகாட்டல்களுடன் ஒத்திசைதல், அவ்வப்போது மீளாய்வு செய்தல். |
| 4. தடைகள் | : | ஏற்றுக்கொள்ளல் அல்லது நிதிகளை இடைநிறுத்தம் செய்தல் உள்ளிட்ட ஒத்திசைவின்மைக்கான தண்டனைகளை அமுல்படுத்துதல். |

வெளிப்படைத்தன்மையுடன், அனைவருக்கும் சந்தர்ப்பமளித்து, சனநாயக ரீதியான பெறுமானங்களுக்கும் இலங்கையின் சட்டங்களுக்கும் அமைய தொழிற்படுவதை உறுதிப்படுத்தி, அரசியற் கட்சிகளின் செயற்பாட்டை முன்னேற்றுவதற்கு உறுதியான அணுகுமுறையொன்றை வழங்குதல்.

இணைப்பு 02

அலுவலக பாவனைக்கு | 26/

**தேர்தல் ஆணைக்குழு**

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**
**அரசியற் கட்சிகளை அங்கீகரித்தல் - 2026**

1. அரசியல் கட்சியின் பெயர் :-

(சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டும்.)

I. සිංහල :- ..........................................................................................................

II. தமிழ் :- ..........................................................................................................

III. English :- ..........................................................................................................

2. உத்தேச கட்சிச் சின்னம் :- .........................................................

(2471/24 ஆம் இலக்க, 2026.01.13 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் (ஆ) அட்டவணையில் தரப்பட்டுள்ள சின்னங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.)

3. கட்சி அலுவலக முகவரி :- ..............................................................................................................

.............................................................................................................................................

4. கட்சி அலுவலகத் தொலைபேசி இல. -

4.1 நிலையான : ...........................................

4.2 தொலைநகல் : .......................................

4.3 மின்னஞ்சல் முகவரி : ............................

5. கட்சிச் செயலாளரின் பெயர் :- ............................................................................................

6. கட்சிச் செயலாளரின் தேசிய அடையாள அட்டை இல. :-...................................................

7. கட்சிச் செயலாளரின் முகவரி :-..........................................................................................

...............................................................................................................................

8. கட்சிச் செயலாளரின் தொலைபேசி இல. :-

கையடக்க : ........................................

நிலையான : .......................................

9. கட்சிச் செயலாளரின் மின்னஞ்சல் முகவரி :- ......................................................................

10. கட்சியைப் அங்கீகரிப்பதற்காக இதற்கு முன்னர் விண்ணப்பித்திருப்பின்,

10.1 விண்ணப்பித்த ஆண்டு : .........................................................

10.2 கோரிய கட்சிப் பெயர் : .........................................................

10.3 அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட திகதி : .........................................................

11. விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :

(அனைத்து ஆவணங்களும் முறையாக இலக்கமிடப்பட்டு இரண்டு பிரதிகளில் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)

| ஆவணம் | உண்டு | இல்லை |
|---|---|---|
| 11.1 கட்சி யாப்பு | | |
| 11.2 கட்சி உத்தியோகத்தர் சபையின் பெயர்ப்பட்டியல் | | |
| 11.3 கட்சி உத்தியோகத்தர்கள் சபையிலுள்ள பெண் உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் (04 ஆண்டுகளுக்குரிய) | | |
| 11.4 பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்பட்ட கட்சியின் கணக்கு அறிக்கைகள் | | |
| 11.5 கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம் | | |
| 11.6 நான்கு(4) ஆண்டுகளுக்குரிய அரசியல் செயற்பாட்டை உறுதிப்படுத்தும் தகவல்கள் அடங்கிய கோப்பு (ஒவ்வோர் ஆண்டுக்கும் வெவ்வேறாக கோப்புகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.) | | |

12. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(5)(ஆ)(ii)(அ) அல்லது (ஆ) பிரிவுக்கு அமைய பதிவுசெய்து கொள்வதற்கு விண்ணப்பிப்பதாயின்,

12.1 இக்கட்சி, சுயேச்சையாக அல்லது கூட்டணியாக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதா?

.....................................................................

12.2 போட்டியிட்டிருப்பின், அவ்வாறு போட்டியிட்ட தேர்தல் மாவட்டங்கள் :

..........................................................................................................................................

12.3 தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை :

..........................................................................................................................................

12.4 கூட்டணியாக போட்டியிட்டிருப்பின், அவ்வாறு கூட்டணி அமைத்த கட்சியின்/ கூட்டணியின் பெயர் :

..........................................................................................................................................

12.5 கூட்டணியில் கட்சி அங்கத்தவர்கள் போட்டியிட்டிருப்பின் -

12.5.1 போட்டியிட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை : .....................................................

12.5.2 போட்டியிட்ட அங்கத்தவர்களின் தகவல்கள் : ..........................................................

| தொடர் இல. | போட்டியிட்ட அங்கத்தவர்களின் பெயர் | முகவரி | போட்டியிட்ட மாவட்டம் |
|---|---|---|---|
| i | | | |
| ii | | | |
| iii | | | |
| iv | | | |
| v | | | |
| vi | | | |
| vii | | | |
| viii | | | |

12.6 குறித்த கூட்டணி அமைத்தல் தொடர்பான கடிதம்/புரிந்துணர்வு ஒப்பந்தம் (உரிய முகவரியின் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.) உண்டு இல்லை

................................................................................. (அரசியல் கட்சி) தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள், எனது அறிவுக்கெட்டிய வகையில் உண்மையானவையும் சரியானவையும் என்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

................................
திகதி

...............................
செயலாளரின் கையொப்பம்
(பதவி இலச்சினை)

EOG 01-0220

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.